(பதிப்புரிமையுடையது)

உ

சிவமயம்



விவேகானந்த சபை கொழும்பு

அகில இலங்கை

4 சைவசமய பாடப்பரீட்சை : 2024

தரம் நான்கு



nselva.com

காலம் அளவு	1.00 மணி

புள்ளிகள் : 100

இல.
மாணவர் சுட்டெண்:

எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை எழுதுக.

1. 1 தொடக்கம் 10 வரையான வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்து அதன்கீழ் கோடிடுக.

1. காரைக்கால் அம்மையாரின் இயற்பெயர் யாது?

   1) வீரமாதேவி 2) திலகவதி 3) புனிதவதி

2. நாம் கோயிலை அண்மித்ததும் முதலில் வணங்க வேண்டியது.

   1) பலிபீடம் 2) கோபுரம் 3) நந்தி

3. வேத சிவாகமங்களிலே விலக்கப்பட்டவை எவை?

   1) களவு, பொய்பேசுதல் 2) உண்மை பேசுதல், களவு 3) கொலை, இரக்கம்

4. பஞ்சபுராணம் ஓதும் வரிசையில் இரண்டாவதாக ஓதப்படுவது எது?

   1) திருவாசகம் 2) தேவாரம் 3) திருவிசைப்பா

5. பிதிர்ச்சாபத்தினால் கீரிமுகம் நீங்கிய திருத்தலம் எது?

   1) முன்னேச்சரம் 2) நகுலேச்சரம் 3) கோணேச்சரம்

6. கஜமுகாசுரனை அழிக்க சிவபெருமானால் தோற்றுவிக்கப்பட்டவர்.

   1) முருகன் 2) பிள்ளையார் 3) பிரம்மா

7. இரணியனை அழிக்க திருமால் எடுத்த அவதாரம் எது?

   1) நரசிம்மன் 2) தசாவதாரம் 3) இராமன்

8. தைப்பொங்கலுக்கு முதல் நாள் கொண்டாடும் பண்டிகை எது?

   1) மாட்டுப்பொங்கல் 2) போகிப்பண்டிகை 3) உழவர் திருநாள்

9. முருகனுக்கு “சுவாமிநாதன்” என்ற பெயர் வரக் காரணம் யாது?

   1) வேதத்தைப் படித்தமையால் 2) குருவாக அமர்ந்து உபதேசம் செய்தமையால்

   3) படைத்தல் தொழில் செய்தமையால்

10. ‘‘சிவபூமி” என்று போற்றப்படும் தலம் எது?

    1) முன்னேச்சரம் 2) நகுலேச்சரம் 3) திருக்கேதீச்சரம்

11. மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் ..... என்ற தேவாரத்தைப் பாடியவர்.

1) திருநாவுக்கரசர் 2) சுந்தரமூர்த்தி நாயனார் 3) திருஞானசம்பந்தர்

12. பாண்டிய மன்னனின் முதலமைச்சராக விளங்கியவர்

1) சம்பந்தர் 2) திருவாதவூரர் 3) மருணீக்கியார்

13. திருக்கடவூர் ஆலயத்தில் எழுந்தருளியுள்ள இறைவனின் பெயர் யாது?

1) கோணேச்சரநாதர் 2) அமிர்தகடேஸ்வரர் 3) முன்னைநாதப்பெருமான்

14. தலவிருட்சங்களாக கொள்ளக்கூடிய மரங்கள் எவை?

1) வாகை, ஆல், மா 2) ஆல், அரசு, நெல்லி 3) ஆல், அரசு, வேம்பு

15. நவராத்திரி விழாவில் தொழிற் கருவிகளை வைத்துச் செய்யப்படும் பூசை.

1) ஆயுத பூஜை 2) விஜயதசமி 3) வசந்த நவராத்திரி

(15 x 1 = 15 புள்ளிகள்**)**

2. பின்வரும் கூற்றுக்கள் யாரால்? யாருக்கு? கூறியவை என எழுதுக.

1. ஆவணி மூலநட்சத்திர நாளில் குதிரைகள் வந்து சேரும்.

யாரால்..... யாருக்கு.....

2. பட்டரே இன்று என்ன திதி?

யாரால்..... யாருக்கு.....

3. எங்கே வேதத்தை ஓதுங்கள் பார்க்கலாம்?

யாரால்..... யாருக்கு.....

4. எனக்கு விளக்கேற்றுவதற்கு நெய் தாருங்கள்.

யாரால்..... யாருக்கு.....

5. என் பசியைப் போக்க வேண்டும்.

யாரால்..... யாருக்கு.....

(5X2= 10 புள்ளிகள்**)**

3. பொருத்தமான சொல்லை தரப்பட்ட சொற்களிலிருந்து தெரிவு செய்து புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

(மாங்கனித் திருவிழா, சிவபூமி, ஆழ்வார் பாசுரங்கள், திரிசுரன், தண்ணளிபுரம், ஆவுரோஞ்சுகல், நமிநந்தியடிகள், நிறைகுடம், தீய பண்புகள், பரமதத்தன்)

1. சோமநாதர் கோயிலில் ஆனிமாதம் ..... மிக சிறப்பாக நடைபெறும்.

2. பொய், கடுஞ்சொல் பேசுதல் என்பன ..... ஆகும்.

3. பசு தனது மேனியை உரோஞ்சுவதற்கு பயன்படுத்துவது ..... ஆகும்.

4. மகாவிஷ்ணுவுடன் தொடர்புடைய பாடல்கள் ..... எனப்படும்.

5. ஏமப்பேரூர் என்னும் ஊரில் ..... வாழ்ந்து வந்தார்.

(5 X2=10 புள்ளிகள்**)**

4. பின்வருவனவற்றுக்கு வினாக்களுக்கு விடை எழுதுக.

1. எளிமையாக விநாயகர் உருவம் செய்யப் பயன்படும் பொருட்கள் எவை?

   .....

2. அறுகம்புல்லின் எப்பகுதிகள் மருத்துவ குணம் மிக்கவை?

   .....

3. நகுலேஸ்வரத்தின் மகோற்சவம் எந்த மாதத்தில் நடைபெறும்?

   .....

4. ‘‘ஒளிர்வளர் விளக்கே” என்னும் திருப்பாடல் பாடப்பட்ட தலம் எது?

   .....

5. நல்லார் ஒருவருக்கு செய்த உதவியானது எதைப் போன்றது?

   .....

6. திருச்சிற்றம்பலம் எப்போது ஓத வேண்டும்?

   .....

7. பஞ்ச புராணம் ஓதும்போது நான்காவதாக ஓதப்படுவது எது?

   .....

8. குருகுலக் கல்வியின் போது சீடர்களுக்கு முக்கியமாகக் கற்றுக் கொடுக்கும் விடயம் யாது?

   .....

9. பஞ்ச பூதங்களும் எவை?

   .....

10. சக்தி என்னுஞ் சொல்லுக்குப் பொருள் யாது?

    .....

(10X2= 20 புள்ளிகள்**)**

5. தொடர்பு படுத்துக

1.	சிவபெருமான்	சிம்மவாகனம்
2.	சனிபகவான்	கருடன்
3.	மஹாவிஷ்ணு	காகம்
4.	வைரவர்	எருது
5.	அம்பிகை	நாய்

(5X2= 10 புள்ளிகள்**)**

6. கீழே தரப்படும் கூற்றுக்கள் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (✗) எனவும் அடையாளமிடுக.

1. கல்வித் தெய்வம் வெள்ளைக் கமலத்தில் வீற்றிருப்பாள். .....
2. இந்திரன் கண்ணனின் கர்வத்தை அடக்கினான். .....
3. ஏழைகளுக்கும் பிராணிகளுக்கும் உணவளிக்கக்கூடாது. .....
4. விநாயகப்பெருமான் அரச மரத்தடியிலும் வீற்றிருப்பார். .....
5. திருக்கோவையார் பாடியது சுந்தரமூர்த்தி நாயனார். .....
6. பிரகலாதன் பல வரங்கள் பெற்ற அசுரன் ஆவான். .....

(6X2= 12 புள்ளிகள்**)**

7. பின்வருவன பற்றி இரண்டு வாக்கியம் வீதம் எழுதுக.

1. சைவ நற்பண்புகள்

   .....

   .....

2. நகுலேஸ்வரம்

   .....

   .....

(2X4= 8 புள்ளிகள்**)**

8. விரும்பிய தேவாரம் ஒன்றை வரிசைக்கிரமாக எழுதுக.

1. சடையா எனுமால் .....
2. ஒளிவளர் விளக்கே .....
3. வேதம் ஓதி வெண்ணூல் .....
4. மண்ணில் நல்ல வண்ணம் .....

(10 புள்ளிகள்**)**

9. பின்வரும் தேவாரத்தின் இடைவெளியைப் பூர்த்தி செய்க

மாசில் வீணையும் .....

வீசு தென்றலும் .....

மூசு வண்டறை ..... போன்றதே

..... எந்தை ..... நீழலே

(5 புள்ளிகள்**)**